## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 62/2015

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாபு | மதம் | : | இந்து |
| த/பெ | : | கண்ணய்யா நாயுடு | ஜாதி | : | -- |
| வயது | : | 68 | கிராமம் | : | கொல்லகுப்பம் |
| தொழில் | : | வழக்கறிஞர் | வட்டம் | : | திருத்தணி |

**29.11.2024**

<u>பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

13. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 4 உயிலில் நஞ்சை, புஞ்சை, கிராம நத்தம் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 4 உயிலில் கண்ட நிலங்களை பி.வா.சா.ஆ 2ல் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளதில் அதற்கான தாய் பத்திரங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. பூர்வீக சொத்துக்கள் ஆகும். கிராம நத்தம் அரசுக்கு சொந்தமான நிலம் என்றால் கிராம நத்தம் எந்த காலத்திலும் அரசுக்கு சொந்தமானது இல்லை.

14. கிராம நத்தம் என்பது மக்கள் குடியிருப்பதற்கான அரசு நிலம்தான் கிராம நத்தம் என சொல்லப்படுகிறது என்றால் உண்மைதான். அரசுதான் மக்களுக்கு குடியிருப்பதற்காக கிராம நத்தத்தில் பட்டா வழங்குகிறது என்றால் குடியிருப்பவர்களுக்கு வழங்குகிறது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 2 , பி.வா.சா.ஆ 4 ஆவணங்களில் உள்ள கிராம நத்த நிலங்களுக்கு அரசு எனது முன்னோர்களுக்கு பட்டா எதுவும் கொடுக்கவில்லை என்றால் கிராம நத்தத்தில் கிணறு இருந்ததால் தமிழக அரசு மின் இணைப்பு எண்.5 இன்றுவரை நரசிம்ம நாயுடு பெயரில்தான் உள்ளது என்பதை அரசு ஆவணங்களிலும் எனது முன்னோர் எழுதிய பதிவு ஆவணங்களிலும் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

15. கிராம நத்தத்தை பொருத்த வரையில் யார் அனுபவித்தில்

உள்ளார்களோ அவருக்குதான் அரசு பட்டா கொடுக்கும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் இன்றும் பாதி நிலங்களுக்கு அனுபவித்தில் உள்ள வெளியூரில் உள்ள நபர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்திற்கு என் முன்னோர்கள் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் அந்த சொத்தில் உள்ள கிணற்றுக்கு தமிழக அரசு மின் இணைப்பு எண்.5 இன்றுவரை நரசிம்ம நாயுடு பெயரில்தான் உள்ளது.

16. தாவா சொத்தை பொறுத்து அரசு எனக்கு கிராம நத்த பட்டா எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் நாங்களாக பி.வா.சா.ஆ 2, பி.வா.சா.ஆ 4 உருவாக்கியுள்ளோம் என்றாலும் பொய். கிராம நத்த பட்டாவிற்கு பதிவு செய்த கிரைய ஆவணத்திற்கு உள்ள அதே மதிப்பு உள்ளது என்றால் கிராம நத்தம் யார் அனுபவித்தில் உள்ளதோ அவர்களுக்கு சொந்தம். திருவள்ளூர் ஆட்சியரும் SLR ல் எங்கள் பெயரில்தான் 3 மனைகளும் இன்றும் உள்ளது.

17. நான் திருவள்ளூர் ஆட்சியர் கொடுத்த கிராம நத்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் திருவள்ளூர் ஆட்சியரும் SLR ல் எங்கள் மூதாதையர் பெயரில்தான் 3 மனைகளும் இன்றும் உள்ளது. தாவா சொத்து கிராம நத்தம் என்றாலும் அனைத்து பொது மக்களும் கிராம நத்தத்தை ஒவ்வொரு சதுரடி மனையையும் உபயோகிக்கிறார்கள் என்றால் பொய். இந்த கிராம நத்தம் எங்கள் தனி அனுபவித்தில் உள்ளது. வாதிகள் அல்லது ஊர் பொது மக்கள் அனுபவித்தில் இல்லை என அவர்களே சாட்சியம் அளித்துள்ளனர்.

18. தாவா சொத்து கிராம நத்தமாக இன்றுவரை உள்ளது என்றாலும் அது எனது அல்லது எனது முன்னோர் அனுபவித்தில் எந்த காலத்திலும் இல்லை என்றால் பொய். 100 ஆண்டுகளாக எனது மற்றும் எனது முன்னோர் அனுபவித்தில்தான் உள்ளது. கிராமத்தார்கள் அனுபவித்து வரும் கிராம நத்த நிலத்தை பி.வா.சா.,ஆ 2, பி.வா.சா.,ஆ 4 மூலம் நாங்கள் இடைஞ்சல் செய்வதால் இந்த வழக்கை வாதிகள் தாக்கல் செய்தனர் என்றால் அவர்கள் பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

19. பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்து சொத்தை எங்களுடையது என சொல்கிறோம் என்றாலும் பொது மக்கள் அனுபவத்தில் உள்ள தாவா சொத்தான கிராம நத்தத்தை பொறுத்து வாதிகள் கோரியப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் திருவள்ளூர் ஆட்சியர் முதல் VAO வரை வழக்கு சொத்தை பார்வையிட்டு எங்களுடைய அனுபவத்தில்தான் உள்ளது என்பதை நிச்சயம் செய்துவிட்டு வழக்கிலும் ஆஜராகவில்லை. இதை வாதிகளும் சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளனர்.

(மறு விசாரணை இல்லை)